[4th March 1966

காரணத்தினால் கரும்புச் சக்கையில் இருந்து தயாரிக்க முடியுமா என்பது பரிசீலிக்கப்படுகிறது. கரும்புச் சக்கையைக்கொண்டு பேப்பர் தயாரிக்க முடியும் என்றால் அதை பாய்லருக்குப் போட்டு எரிப்பது, ரூபாய் நோட்டை சிகரெட் பத்தவைக்க கொளுத்திக் கொள்வதுபோலத்தான் இருக்கும். பாய்லர் பத்தவைக்க நாம் வேறு ஆயில் பொருள்களைக் கொடுத்துவிட்டால் இதைப் பேப்பருக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கண்டவராயன்பட்டி அணைக்கட்டு

*.169 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் கண்டவராயன்பட்டி அணைக்கட்டுத் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

The Hon. Sri P. KAKKAN: (*a*) and (*b*) Yes, details are being finalised by the Chief Engineer (Irrigation) and the Board of Revenue (Food Production).

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தப் பரிசீலனை தொடங்கி பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன என்பது உண்மையா? இவ்வளவு நீண்டகாலம் பரிசீலிக்கக் காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

போலீஸ் நிலையம்

* 170 கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்திலுள்ள திருப்புனவாசலில் புதிதாக போலீஸ் நிலையம் ஒன்று அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

கனம் திரு. பூ. கக்கன்: இல்லை.

சென்னைத் துறைமுகத்தில் வெடி விபத்து

* 171 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சென்னை துறைமுகத்தில் வெடி விபத்து ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன?